# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | நாடகமும் அரங்கியலும் I<br>**Drama & Theatre I** | நேரம் :- 3 மணித்தியாங்கள் |
| சுட்டெண்:............................... | 45 T I | |

**கவனிக்க:**

- எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1.நாடகத்தின் தொட்டில் என வர்ணிக்கப்படும் நாடு எது?

1. இங்கிலாந்து  2.ஜேர்மனி  3. பிரான்ஸ்  4.கிரேக்கம்

**2.**மஹாகவி உருத்திரமூர்த்தியின் நாடகமல்லாதது

2. புதியதொருவீடு  2. கோடை  3. பொருளோபொருள்  4. முற்றிற்று

3. ஒபேரா, இசைநாடகம், நூர்த்தி போன்ற ஆற்றுகை வடிவங்களில் முனைப்புறுத்தப்படும் சித்திரிப்பு வகை

1.உடல்வழிச் சித்திரிப்பு  2 .உணர்ச்சிவழிச் சித்திரிப்பு
3. குரல்வழிச் சித்திரிப்பு  4.காண்பியவழிச் சித்திரிப்பு

4. யதார்த்த மோடி நாடகத்தில் காணப்படும் பிரதான இயல்புகளில் ஒன்று

1. சொல்லாடல்கள் சந்தம் தாளம் ஆகியவற்றுக்கு ஏற்றதாகக் காணப்படும்
2. மேடைப்பின்னணி குறியீடாகக் காணப்படும்
3. வேட உடைகள் மிகைப்படுத்திக் காணப்படும்
4. காட்சியமைப்பு ஒப்பனை இயல்பானதாகக் காணப்படும்

5. மேடைப்பரப்பொன்றிலே முகக்கியத்துவம் குறைந்த பகுதியாகக் கருதத்தக்கது

1.UC  2. DC  3. CC  4. DL

6. நாடகம் ஒன்று நிகழ்த்த மிக அவசியமானது.

1. நடிகர்  2. மேடை  3. காட்சி  4. இசை

**7**. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் **ஆரொடு நோகேன்** ஒரு

1. இசை நாடகம்
2. நாட்டிய நாடகம்
3. பாடசாலை நாடகம்
4. சிறுவர் நாடகம்

**8**. ஈழத்தில் இயல்பான பேச்சு மொழியைக் கையாண்டு இயற்பண்பு வாத முறையில் நாடகங்களை எழுதியவர்.

1. சு.வித்தியானந்தன்
2. க.கணபதிப்பிள்ளை
3. கலையரசு சொர்ணலிங்கம்
4. மகாகவி உருத்திரமூர்த்தி

**9**. கா.சிவத்தம்பி அவர்கள் எழுதிய அரங்க ஆய்வு நூல்களில் ஒன்று

1. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
2. ஈழத்து இசை நாடக வரலாறு
3. அரங்கு ஓர் அறிமுகம்
4. வட இலங்கை நாட்டார் அரங்கு

**10**. கூத்து என்றவுடன் எம் மனதில் வருவது

1. பாட்டு
2. இசை
3. ஆட்டம்
4. மேடை

**11**. ஒரு பாத்திரத்தில் காணப்படும் பல்வேறு முகம்

1. வகிபாகம்
2. மெய்நிலை
3. பாவம்
4. நடிப்பு

**12**. நாடகம் ஒன்றிற்கான விளம்பரத்தினை மேற்கொள்பவர்

(1) நாடக ஆசிரியர்
(2). தயாரிப்பாளர்
(3) நெறியாளர்
(4). மேடை முகாமையாளர்

**13**. ஒரு நாடகத்திற்கான காட்சி அலங்காரம் என்பது

1. எப்போதும் நடப்பியல்பை ஒத்ததாக இருக்க வேண்டும்
2. பகட்டாகவும் ஆடம்பரமாகவும் இருக்க வேண்டும்.
3. எப்போதும் பின்னாலே இருத்தல் வேண்டும்
4. நாடக அளிக்கையின் பிரதான மோடியை நிலை நிறுத்தல் வேண்டும்.

**14.** பொறுத்தது போதும் புதியதொரு வீடு போன்ற நாடகங்களை முதலில் நெறியாள்கை செய்தவர்

1.இளைய பத்மநாதன்
2. சுஹைர் ஹமிட்
3. அ.தாசீசியஸ்
4. நா.சுந்தரலிங்கம்

**15.** அங்க அசைவுகளாலும் சொற்களாலும் வெளியிடப்படும் கருத்துக்களை முகத்தின் உணர்வு மூலம் எடுத்துக் காட்டலாம் இக்கூற்றில் இடம்பெறும் சித்தரிப்புக்கள் முறையே

1.குரல் வழி உணர்ச்சிவழி காண்பியவழி என்பனவாகும்
2. உடல்வழி குரல் வழி உணர்ச்சி வழி என்பனவாகும்
3. உணர்ச்சிவழி காண்பியவழி உடல் வழி என்பனவாகும்
4. உடல்வழி குரல் வழி காண்பிய வழி என்பனவாகும்

**16.** நடிகர் எப்போதும்

1. சித்தரிப்பு ஆற்றல் உடையவரக இருத்தல வேண்டும்
2. அழகானவரக இருத்தல் வேண்டும்
3. நல்ல தடித்த குரல் உடையவராக இருத்தல் வேண்டும்
4. விலை உயர்ந்த கவர்ச்சியான வேடஉடை அணிந்திருத்தல் வேண்டும்

**17.** நாடக எழுத்துருவை ஆற்றுகையாக படைப்பாக்கம் செய்பவர்

1. தயாரிப்பாளர் 2.நெறியாளர்
3. மேடை முகாமையளர் 4. பார்ப்போர்

**18.** காவியுடுத்தல்லவோ ஆதிசிவன் நானும் எனும் பாடல்

1. மட்டக்களப்பிற்குரியது 2. யாழ்ப்பாணத்திற்குரியது
3. மலையகத்திற்குரியது 4. மன்னாரிற்குரியது

**19.** கூத்து நிகழ்த்துவதற்கான வட்டக்களரி அரங்கில் பார்ப்போர்

1. இரண்டுபக்கமும் இருப்பர் 2. ஒரு பக்கம் இருப்பர்
3. சுற்றிவர இருப்பர் 4. மூன்று பக்கமும் இருப்பர்

20. நாடகத்தின் துணைக்கலைகளில் ஒன்றாகிய மேடைப் பொருட்கள் பயன்படுத்துவதின் நோக்கங்களில் ஒன்று அல்லாதது.

1. பாத்திரங்களில் சமூக அந்தஸ்தை புலப்படுத்துவதாக அமைதல்
2. இலகுவாக நகர்த்தக் கூடியதாக அமைதல்
3. அரங்க வெளியில் அழகியல் தோற்றத்தை ஏற்படுத்துவதாக அமைதல்
4 .உயர் சமூக அந்தஸ்த்தை வெளிப்படுத்துவதாய் அமைதல்

**21.** புதியதொரு வீடு நாடகம் எவ்வகை சார்ந்தது

1. சமய நாடகம் 2. பா நாடகம் 3. வரலாற்று நாடகம் 4. இசை நாடகம்

**22.** புதியதொரு வீடு நாடகப் பாத்திரம் அல்லாதது?

1.மாதவன் 2. மயிலி 3.மன்னவன். 4. மறைக்காடர்

**23.** உளம் தொடர்பான பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டுகளில் ஒன்று.

1. ஆடும் வீடும் 2. குருட்டு ஆட்டோ
3. வெயிற் படுதல் 4. பழக் கலவை

**24.** இசை நாடகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட விடயங்கள் அடங்காத தொகுதி

1. படச்சட்ட மேடை மற்றும் கொட்டகை அமைத்தல்
2. வாயு விளக்குகள் மற்றும் வர்ணம் தீட்டப்பட்ட காட்சித் திரைகள்
3. ஆடுதலும் ஆட்டக்கோலங்களும் என்ற நடிப்பு முறை
4. பாடுதலும் நடித்தலும் என்ற செழுமையான நடிப்பு முறை

**25.** மன்னார் மாந்தோட்ட நாடகங்கள் என்னும் அரங்க ஆய்வு நூலை வெளியிட்டவர்
1. அருட்திரு செ.அன்புராஜா அடிகள்
2. பேரசிரியர் அருட்திரு மரியசேவியர் அடிகள்
3. பேராசிரியர் அருட்திரு பிலேடுரன் அடிகள்
4. அருட்திரு டேமியன் அடிகள்

**26** புதியதொரு வீடு நாடகத்திலிருந்து வரும் உரையாடல்களை அவதானித்து விடையளிக்குக.
A. நெடுந்தூரம், நீண்ட நாள் ஓடி நினைவெல்லாம் நீயாக மீண்டேன் இதுவோ விளையவிருந்ததம்மா

**இவ்வுரையாடலிற்குரிய பாத்திரமாக அமைவது**
1. மன்னவன்
2. மாசிலன்
3. மாயன்
4. மயிலி

**27.** பாத்திரமொன்றின் தோற்றம் நிறம் பால் என்பன
1. பௌதீகப் பண்புகள்
2. உளவியற் பண்புகள்
3. சமூக குணாம்சங்கள்
4. இயல்பிசைக் குணாம்சங்கள்

**28.** புதியதொரு வீடு நாடகம் எழுதப்பட்ட ஆண்டு?
1. 1963
2. 1969
3. 1971
4.1979

**29.** காத்தவராயன் கூத்தில் தொடர்பற்ற அம்மன்
1.பார்வதி அம்மன்
2.கண்ணகி அம்மன்
3.காளி அம்மன்
4.மாரி அம்மன்

**30.** தப்பு எனும் வாத்தியக்கருவி பிரதானமாக இடம் பெறும் கூத்து வடிவம்
1. காத்தவராயன் கூத்து
2. கோவலன் கூத்து
3. காமன் கூத்து
4. வடமோடிக் கூத்து

**31.** .சகுனியர் மூவர் என்ற கூத்துருவ நாடகத்தினை எழுதியவர்
1. பொன்.கணேசமூர்த்தி
2. இளைய பத்மநாதன்
3 ஜோன்சன் ராஜ்குமார்
3. சி.மௌனகுரு

**32.** நடிப்பதைப் பார்த்து பார்ப்போருக்கு ஏற்படும் மனவெளிப்பாட்டினை கிரேக்கத்தில் எவ்வாறு அழைப்பர்
1. ரச
2. யூஜின்
3. கதாசிஸ்
4. மெய்ப்பாடு

**33.** மனோரதிய நாடகங்களின் காட்சியமைப்பு பெரும்பாலும்
1. சாதரண வாழ்வு நிலைப் பட்டதாகும்
2. குறியிட்டுத் தன்மை கொண்டதாகும்
3. அழகும் ஆடம்பரமும் நிறைந்ததாகும்
4. யதார்த்தமானதாகும்

**34.** மரபு வழி கூத்தில் பயன்படுத்தப்படும் சதங்கை என்பது
1. வரைதல் முறையிலான ஒப்பனையைக் குறிக்கம்
2. அணிதல் முறையிலான ஒப்பனையைக் குறிக்கம்
3. பூசுதல் முறையிலான ஒப்பனையைக் குறிக்கம்
4. மேற்கூறிய யாவும் அல்ல

**35**. நாடகத்தின் அடிப்படை மூலக்கூறுகள்

1. நடிகர், மேடை, காட்சி
2. நடிகர், காட்சி, ஒப்பனை
3. நடிகர், பார்ப்போர், ஆற்றுகைவெளி
4. நடிகர், கதைக்கரு, பார்ப்போர்

**36**. நாடகம் ஒன்றிற்கான நடிகரை வழங்கும் பொறுப்புடையவர்

2. நாடக ஆசிரியர்      3. தயாரிப்பாளர்
3. நெறியாளர்      4. மேடை முகாமையாளர்

**37**. அரங்கில் செவிப்புல ரீதியான தாக்கத்தை பார்ப்போருக்கு ஏற்படுத்தும் துணைக்கலை

1. காட்சி விதானிப்பு ஆகும்      2. இசை விதானிப்பு ஆகும்
3 அரங்க ஒளியுட்டுகை ஆகும.      4 வேடஉடை ஒப்பனை ஆகும்

**38**. தற்போது உலகளாவிய ரீதியில் வெளிவரும் நாடக சஞ்சிகை

1. அரங்கு    2. ஆற்றுகை    3. கூத்தரங்கம்    4. உடல்

**39**. படம் குறிக்கும் ஒளி வகை



1. சுழலும் வர்ணச்சில்லு      2.பரப்பொளி
3 பொட்டொளி      4.கீற்றொளி

**40**. படம் குறித்து நிற்கும் நாடக ஆளுமையின் பிரமாண்ட படைப்பாக அமைவது



1.காத்தவராயன் கூத்து.      2. இராவணேசன் கூத்து

3 கோவலன் கூத்து      4. காமன் கூத்து